# நம்மை இரட்சிக்க தேவன் ஓர் ஆட்டுக்குட்டியை அளித்தார்

## கர்த்தரின் பந்தியைப் போற்ற சிறுவர்களுக்கு உதவி செய்யவும்.

கீழ்காணும் சிறுவர் கல்வி நடிவடிக்கைகளில் எதை வேண்டுமானாலும் தெரிந்து கொள்க.



பெரிய பிள்ளை அல்லது ஆசிரியர்: ஆதியாகமம் 22:1-18 ல் இருந்து, ஆபிரகாம் ஈசாக்கின் கதையை வாசிக்கவும் அல்லது கூறவும். ஒரு வாலிபனை இரட்சிக்க தேவன் எவ்வாறு ஓர் ஆட்டுக்குட்டியை அருளினார் என்பதை இக்கதை கூறுகிறது.

முடியுமானால் பிள்ளைகள் இந்தப் படத்திற்கு வண்ணம் தீட்டவும்

கதையைக் கூறிய பின், வரும் **கேள்விகளைக்** கேட்கவும்.

- ஆபிரகாமின் விசுவாசத்தை தேவன் எவ்வாறு சோதித்தார். (வசனம் 2).
- ஆபிரகாம் எவ்வாறு மேன்மையான முறையில் கீழ்ப்படிந்தான்? (3).
- பயணம் சென்றபோது ஈசாக்கு என்ன கேட்டான்? (7).
- ஆபிரகாம் ஈசாக்குக்கு என்ன பதில் அளித்தான்? (8)
- ஈசாக்கைக் கொல்லாதவாறு தேவன் ஆபிரகாமை எவ்வாறு தடுத்தார்? (11)
- பலி இடுவதற்காக தேவன் எதைக் கொடுத்தார்? (13)
- ஆபிரகாமின் கீழ்ப்படிதலுக்காக தேவன் அவனுக்கு அளித்த ஆசீர்வாதம் என்ன? (16-18).

**விளக்குக:** ஈசாக்குக்குப் பதிலாக ஆட்டுக்குட்டி மரித்தது போல, நமக்குப் பதிலாக மரித்த தேவ ஆட்டுக்குட்டியின் சரீரத்திலும் இரத்தத்திலும் நாம் பங்கு பெறுவதே கர்த்தரின் பந்தியாகும்.

ஆதியாகமம் 22:1-18 ல் இருந்து ஆபிரகாம் ஈசாக்கின் கதையில் சில பகுதிகளை **நாடகமாக்குக.** இந்த நாடகத்தை ஆராதனையின் போது பெரியவர்களுக்கு நடத்திக் காட்ட சபைத்தலைவரோடு பேசி ஏற்பாடு செய்யவும். கீழே உள்ள கவிதையை வழங்கவும், வரைந்த படத்தைக் காட்டவும். சிறுவர்களுக்கு உதவி செய்யவும்.

- **பெரிய பிள்ளைகள்** அல்லது பெரியவர்கள் நடிக்க வேண்டிய பகுதிகள்:
  **1) கதை கூறுபவர் 2) தேவ தூதன் 3) ஆபிரகாம்** (ஒரு கத்தியும் கயறும் வைத்துக் கொள்ளவும் அல்லது வைத்திருப்பதாக பாவிக்கவும்)
- **சிறிய பிள்ளைகள்** நடிக்க வேண்டிய பாகங்கள்:
  **ஈசாக்கு**
  **ஆட்டுக்குட்டி** (கைகளாலும் முழங்கால்களாலும் நடக்கவும்)
  **வேலைக்காரர்கள்** (ஒரு கட்டு குச்சிகள் வைத்திருக்கவும்)

**கதை கூறுபவர்:** வசனங்கள் 1-6 ல் இருந்து கதையின் முதற்பகுதியைக் கூறவும். பின்: "தேவன் ஆபிரகாமிடம் என்ன கூறினான் என்பதைக் கேளுங்கள்."

**தேவதூதன்:** "மோரியா மலையில் உனது மகனை பலி இடுமாறு எல்லாம் வல்ல தேவன் கட்டளை இடுகிறார்."

**ஆபிரகாம்:** மேல் நோக்கிப் பார்த்து, "சரி, ஆண்டவரே!"

வேலைக்காரரிடம், "ஈசாக்கை அழைத்து வாருங்கள். ஒரு கட்டு விறகையும், கத்தியையும் கொண்டு வாருங்கள்."

**வேலைக்காரர்கள்:** சென்று, ஈசாக்கோடும், விறகோடும் கத்தியோடும் வருதல்.

**ஆபிரகாம்:** விறகை ஈசாக்கின் முதுகில் வைத்து, கத்தியை எடுத்துக் கொண்டு, ஈசாக்கு பின் தொடர நடத்தல்.

**கதை கூறுபவர்:** வசனங்கள் 7-10 லிருந்து கதையின் இரண்டாவது பகுதியைக் கூறிவிட்டு பின், "ஈசாக்கு சொல்லுவதைக் கேளுங்கள்."

**ஈசாக்கு** : "அப்பா! பலியிட ஆடு எங்கே?"

**ஆபிரகாம்:** "ஆட்டுக்குட்டியை தேவன் தருவார்."

**ஈசாக்கு** : ஒரு மேசை அல்லது பெஞ்ச் மேல் படுக்கவும் (பலி பீடம்).

**ஆபிரகாம்:** கயற்றால் கட்டி (அல்லது பாவித்து) கத்தியை ஓங்க...

**தேவதூதன்:** "நில்! அவனைக் கொல்லாதே! நீ தேவனுக்கு பயப்படுகிறாய் என்பதை, உனது மகனை அவருக்குக் கொடுக்க தயங்காததின் மூலம் அறிகிறேன்."

**கதை கூறுபவர்:** வசனங்கள் 11-18 ல் இருந்து கதையின் மூன்றாவது பகுதியைக் கூறவும்.

**ஆட்டுக்குட்டி:** அறையின் மறு புறம் இருந்து மெதுவாகக் கத்தவும்.

**ஈசாக்கு** : "இதோ, அப்பா, புதருக்குள் ஓர் ஆட்டுக்கிடா மாட்டிக்கிடக்கிறது. தேவன் பலியை நமக்காகத் தந்துள்ளார்."

**ஆபிரகாம்:** ஈசாக்கை அவிழ்த்து விட்டு, "ஆட்டை கொண்டு வந்து பலி பீடத்தில் கட்டு!"

**தேவ தூதன்:** "ஆபிரகாமே! தேவனுடைய நித்திய ஆசீர்வாதத்தைக் கேள். கீழ்ப்படிந்த காரணத்தால் அவர் உன்னை ஆசீர்வதிப்பார். உன்னுடைய சந்ததி பெரிதாய் இருக்கும். உன் வம்சத்தில் வரும் ஒருவர் மூலம் அவர் எல்லா ஜனங்களையும் ஆசீர்வதிப்பார்!"

**கதை கூறுபவர்:** நாடகத்துக்கு உதவிய யாவருக்கும் நன்றி கூறுதல்.

ஓர் ஆட்டுக்குட்டியின் படத்தை **வரைக.**



- அடுத்த ஆராதனை வேளையில் சிறுவர்கள் படத்தைப் பெரியவர்களிடம் காட்டி, இது எவ்வாறு தேவ ஆட்டுக்குட்டியான இயேசு நமது பாவத்தைப் போக்க வந்தார் என்பதை சித்திரிக்கிறது என்று விளக்கவும்.
- **பெரிய பிள்ளைகள்** சிறியவர்களுக்கு உதவவும்.

தேவன் ஆபிரகாமுக்கு அளித்த வாக்குத்தத்தம் எவ்வாறு இயேசுவின் மூலமாக இன்று நமக்கு உண்மை-யாக வந்தது என்பதை விளக்குமாறு **சிறுவர்களைக் கேட்கவும்.**

**மனப்பாடம்:** ரோமர் 6:23.

**சங்கீதம்:** 27:1, 2, 13, 14 ஐ நான்கு சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும்.

தேவன் நமக்கு ஓர் ஆட்டுக்குட்டியை அளித்தது குறித்து பெரிய பிள்ளைகள் பாடலோ கவிதையோ எழுதட்டும். இதை வார நாட்களில் அவர்கள் செய்யலாம்.

**ஜெபம்:** "அன்பான பிதாவே, தேவ ஆட்டுக்குட்டியான உமது மகனை எங்களுக்காக மரிக்க தந்ததற்காக நன்றி. எங்கள் யாவருடைய பாவங்களையும் மன்னிக்க அவரது கிருபாதார பலியே போதுமான அளவுக்கு பெரிதாய் இருந்தது. நாங்கள் கர்த்தரின் பந்தியை உட்கொள்ளும் போது இதை நினைவு கூர எங்களுக்கு உதவுவீராக. ஆபிரகாமைப் போல உமக்கு கீழ்ப்படிய எங்களுக்கு உதவும்."

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net